# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## June 5, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. 2027-28 கால கட்டத்துக்கான, ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலின் தற்காலிக உறுப்பினர்களாக ஆஸ்திரியா, கிர்கிஸ்தான், போர்ச்சுகல், டிரினிடாட் டொபேகோ, ஜிம்பாப்வே ஆகிய 5 நாடுகள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன. 193 உறுப்பினர்களைக் கொண்ட ஐ.நா. பொதுச்சபையில் நடைபெற்ற விறுவிறுப்பான ரகசிய வாக்கெடுப்பில் இந்நாடுகள் வெற்றி பெற்றன.

(i) தற்போதைய தற்காலிக உறுப்பினர்களான டென்மார்க், கிரேக்கம், பாகிஸ்தான், பனாமா, சோமாலியா ஆகிய நாடுகளின் பதவிக்காலம் 2026 இறுதியில் நிறைவடைய உள்ள நிலையில், புதிய நாடுகள் வரும் 2027, ஜனவரி 1 முதல் 2 ஆண்டு காலப் பொறுப்பை ஏற்கும்.

(ii) மேற்கு ஐரோப்பிய மற்றும் இதர நாடுகள் பிரிவில் 2 இடங்களுக்காக நடைபெற்ற போட்டியில் போர்ச்சுகல் 134 வாக்குகளையும், ஆஸ்திரியா 131 வாக்குகளையும் பெற்று வெற்றி பெற்றன. ஆனால், இப்பிரிவில் பலத்த எதிர்பார்ப்புக்குரிய நாடாகக் கருதப்பட்ட ஜெர்மனி 104 வாக்குகள் மட்டுமே பெற்று தோல்வியடைந்து பின்னடைவைச் சந்தித்தது.

(iii) ஆப்பிரிக்க மற்றும் ஆசிய-பசிபிக் பிராந்தியத்துக்கான இடங்களில் ஜிம்பாப்வே 182 வாக்குகளைப் பெற்று எளிதாக வென்றது. மற்றொரு இடத்துக்கு நடைபெற்ற கடுமையானபோட்டியில், 4 சுற்று வாக்குப்பதிவுகளுக்குப் பிறகு கிர்கிஸ்தான் 142 வாக்குகளுடன் பிலிப்பின்ஸை வீழ்த்தியது. இதன்மூலம், கிர்கிஸ்தான் முதல்முறையாக பாதுகாப்பு கவுன்சிலில் தடம் பதிக்கிறது. தென் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகள் பிரிவில் டிரினிடாட் டொபேகோ நாடு 181 வாக்குகள் பெற்று தற்காலிக உறுப்பினராகத் தேர்வானது.

(iv) மொத்தம் 15 உறுப்பினர்களைக் கொண்ட ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் அமெரிக்கா, பிரிட்டன், சீனா, பிரான்ஸ், ரஷியா ஆகிய 5 நாடுகள் 'வீட்டோ அதிகாரம் கொண்ட நிரந்தர உறுப்பினர்களாக உள்ளன.

(v) மீதமுள்ள 10 தற்காலிக இடங்களில், தற்போது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 5 புதிய நாடுகள், ஏற்கெனவே பதவியில் நீடிக்கும் பஹ்ரைன், கொலம்பியா, காங்கோ ஜனநாயகக் குடியரசு, லாத்வியா, லைபீரியா ஆகிய நாடுகளுடன் இணைந்து அடுத்த ஆண்டு முதல் செயல்படவுள்ளன.

(vi) இந்தியா கடந்த 2021-22 காலகட்டத்தில் தற்காலிக உறுப்பினராக இருந்த நிலையில், அடுத்ததாக 2028-29 காலகட்டத்துக்கான உறுப்பினர் பதவிக்கு போட்டியிடப் போவதாக ஏற்கெனவே அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

2. 100 சதவீதம் வரை எத்தனால் கலப்பு எரிபொருளில் இயங்கும் இந்தியாவின் முதல் 'ஃபிளெக்ஸ்- ஃபியூயல்' காரான 'வேகன் ஆர்' மாடலை மாருதி சுஸூகி நிறுவனம் அறிமுகப்படுத்தியது.

(i) இப்புதிய ரக காரானது, பெட்ரோல் மற்றும் 20 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை எத்தனால் கலக்கப்பட்ட எந்தவொரு எரிபொருள் கலவையிலும் இயங்கும் வகையில் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

(ii) காரின் என்ஜினில்னில் உள்ள மேம்பட்ட 'ஈசியூ' தொழில்நுட்பம், எரிபொருளில் உள்ள எத்தனால் அளவைத் தானாகவே கண்டறிந்து அதற்கேற்ப காரின் இயக்கத்தைச் சீரமைக்கும் திறன் கொண்டது.

(iii) தில்லியில் நடைபெற்ற காரின் அறிமுக விழாவில் மத்திய சாலைப் போக்குவரத்து அமைச்சர் நிதின் கட்கரி கலந்து கொண்டு பேசுகையில், 'இந்தியா ஆண்டுதோறும் பெருமளவில் கச்சா எண்ணெய்யை இறக்குமதி செய்கிறது. எத்தனால் போன்ற உயிரி எரிபொருள்கள் இந்த இறக்கும்திச் சார்பு நிலையைக் குறைப்ப தோடு, கிராமப்புற பொருளாதாரத்தை வலுப்படுத்தும்' என்றார்.

(iv) 100 எத்தனால் எரிபொருள் நிலையங்கள்:

- மத்திய பெட்ரோலியம் அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி பேசுகையில், 'இந்திய விவசாயிகளை உணவு வழங்குபவர்கள் என்ற நிலையிலிருந்து, எரி பொருள் வழங்குபவர்கள் என்ற நிலைக்கு உயர்த்தியுள்ளோம். இந்த வாகனங்கள் நாட்டின் மதிப்புமிக்க அந்நியச் செலாவணியைச் சேமிப்பதோடு, கார்பன் உமிழ்வைக் குறைத்து கிராமப்புற மேம்பாட்டுக்கு புதிய வாய்ப்புகளை உருவாக்கும்.
- தில்லி, மகாராஷ்டிரத்தில் 100 எத்தனால் எரி பொருள் விற்பனை நிலையங்களை மத்திய அரசு திறக்கவுள்ளது. இது நடப்பாண்டு இறுதிக்குள் 500-ஆகவும், அடுத்த ஆண்டு இறுதிக்குள் 5,000-ஆகவும் அதிகரிக்கக்கூடும்' என்று குறிப்பிட்டார்.
- கார்பன் உமிழ்வு மற்றும் எண்ணெய் இறக்குமதியைக் குறைக்கும் இந்தியாவின் இரட்டை இலக்குகளுக்குப் பங்களிக்கும் வகையில் பல்வேறு தொழில்நுட்ப வாகனங்களை வழங்க மாருதி சுஸூகி அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருவதாக நிறுவனத்தின் சிஇஓ ஹிசாஷி தாகேயுச்சி குறிப்பிட்டார்.

3. ஃபிஃபா உலகக்கோப்பை கால்பந்து போட்டியில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 4 பேர் வெளிநாட்டு அணிகளில் களம் காண்கின்றனர்.

(i) 23-ஆவது உலகக் கோப்பை கால்பந்து போட்டி, வரும் 11-ஆம் தேதி தொடங்கி ஜூலை 19-ஆம் தேதி வரை நடை பெறவுள்ளது. கனடா, மெக்ஸிகோ, அமெரிக்கா என 3 நாடுகளில் விளையாடப்படவுள்ள இப்போட்டியில், மொத்தம் 48 அணிகள் பங்கேற்கின்றன.

(ii) உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் விளையாடும் கனவு இந்தியாவுக்கு இருந்தாலும், அது நீண்டகாலமாக கைக்கெட்டாமலேயே நீடிக்கிறது. இந்நிலையில், நடப்பாண்டு அந்தப் போட்டியில், இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 4 பேர் வெளிநாட்டு அணிகளுக்காக விளையாடவுள்ளனர்.

(iii) ஒரு வீரர்/வீராங்கனை, தனது தாய், தந்தையோ அல்லது அவர்களின் பெற்றோரோ பிறந்த நாட்டின் தேசிய அணியில் விளையாட ஃபிஃபா விதிகள் அனுமதிக்கிறது. தாம் விளையாடும் நாட்டின் கடவுச் சீட்டும் (பாஸ்போர்ட்) அவர் வைத்திருக்க வேண்டும்.

1.சர்பிரீத் சிங் (நியூஸிலாந்து)

2.சாமுவேல் முத்துசாமி (டிஆர் காங்கோ)

3.நிஷான் வேலுபிள்ளை (ஆஸ்திரேலியா)

4.தசின் முகமது ஜம்ஷித் (கத்தார்)

- உலகக் கோப்பை கால்பந்து போட்டியின் வரலாற்றில், முதல் முதலாகக் களம் கண்ட இந்திய வம்சாவளி வீரர் விகாஸ் தோராசூ ஆவார். 2006 உலகக் கோப்பை போட்டியில் பிரான்ஸ் அணிக்காக அவர் அந்தப் விளையாடினார். போட்டியில் பிரான்ஸ், ரன்னர் அப் விருது பெற்றது.
- லயன், பிஎஸ்ஜி, ஏசி மிலன் என பிரபல கால்பந்து கிளப்புகளுக்காகவும் விளையாடியுள்ள விகாஸின் முன்னோர்கள், ஆந்திர பிரதேசத்தை பூர்விகமாகக் கொண்டவர்களாவர்.

4. முதல்முறையாக நடைபெறும் உலக யோகாசன சாம்பியன்ஷிப்பை, பிரதமர் நரேந்திர மோடி காணொலி வாயிலாக அகமதாபாதில் வியாழக்கிழமை தொடங்கி வைத்தார்.

5. கடல் பரப்பில் வெப்பநிலை அதிகரிப்பால் பருவ மழையைப் பாதிக்கும் 'எல்-நினோ' விளைவால், விளைச்சல் குறைந்து பருப்பு வகைகள் விலை அதிகரிக்காமல் தடுக்க மத்திய அரசு தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. தில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற மத்திய நுகர்வோர் விவகாரத் துறைச் செயலர் நிதி காரே இது தொடர்பாக மேலும் கூறியதாவது:

(i) முன்னெப்போதும் இல்லாத வகையில் 43 லட்சம் டன் பருப்பு வகைகளை மத்திய அரசு கையிருப்பு வைத்துள்ளது. எல்-நினோ விளைவு காரணமாக உற்பத்திக் குறைவு, விலை உயர்வு அபாயத்தை சமாளிக்க இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தக் கையிருப்பு இப்போது பயன்படுத்தப்பட மாட்டாது. காரீஃப் சாகுபடி பாதிக்கப்படும்போது மட்டுமே பயன்படுத்தப்படும். கடந்த ஆண்டு இருந்ததைவிட இப்போது பருப்பு கையிருப்பு இருமடங்கு உள்ளது. எனவே, பொதுமக்களுக்கு சீரான விலையில் பருப்பு விநியோகம் இருக்கும்.

(ii) பருப்பு வகைகள் தொடர்பான மத்திய அரசின் உறுதியான கொள்முதல் கொள்கை, இறக்குமதி சார்பை குறைத்து உள்நாட்டில் உற்பத்தியை அதிகரிக்க மேற்கொண்ட முயற்சிகள் ஆகியவற்றால் உள் நாட்டில் பருப்பு சாகுபடி குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகரித்தது. பருப்பு வகைகளை 2 முதல் 3 ஆண்டுகள் வரை பாதுகாப்பாக வைத்திருக்க முடியும் என்றார் அவர்.

6. இறக்குமதியைக் குறைத்து உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்க வேண்டிய 100 பொருள்களை அடையாளம் காண துறை சார்ந்த ஆறு பணிக் குழுக்களை மத்திய அரசு அமைத் துள்ளது. இதுகுறித்து மத்திய அரசு அதிகாரிகள் கூறியதாவது:

(i) முழுவதும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுவதை ஊக்குவிக்கும் வகையில், 100 பொருள்களை அடையாளம் காண்பதற்காக மருந்து உற்பத்தி, உயிரித் தொழில்நுட்பம் மற்றும் மருத்துவ உபகரணங்கள்; ரசாயனம் மற்றும் பெட்ரோலிய வேதிப் பொருள்கள், ஜவுளி மற்றும் காலணி; மூலதனப் பொருள்கள், வாகனங்கள் மற்றும் மின்சார வாகனங்கள், மேம்பட்ட மூலதனப் பொருள்கள்; எரிசக்தி; கட்டுமான உபகரணங்கள் மற்றும் உள்கட்டமைப்பு, பாதுகாப்பு, விண்வெளி மற்றும் மின்னணுத் துறை ஆகிய 6 குறிப்பிட்ட துறை சார்ந்த பணிக் குழுக்களை மத்திய அரசு அமைத்துள்ளது.

(ii) இந்தக் குழுக்களில் வணிகம், தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை, நீதி ஆயோக், மருந்து பொருள்கள், பொருளாதார விவகாரம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், ரசயானம், மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பம், சாலைப் போக்குவரத்து, புது மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, எண்ணெய் உள்ளிட்ட பல்வேறு மத்திய அமைச்சகங்கள் மற்றும் துறைசார்ந்த அலுவலர்கள் உறுப்பினர்களாக இடம் பெறுவர்.

(iii) தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறைச் செயலர் தலைமையில் இந்தக் குழுக்கள் கூடி ஆலோசனைகளை மேற்கொண்டு, இந்தியாவில் உற்பத்தி செய்யப்படாத அல்லது நாட்டின் தேவையை பூர்த்தி செய்யும் அளவுக்கு உற்பத்தி செய்யப்படாத பொருள்களை அடையாளம் காணும் நடவடிக்கையை மேற்கொள்ளும். அதன் பின்னர், அடையாளம் காணப்பட்ட பொருள்கள் தொடர்பான பட்டியலை, மத்திய அமைச்சரவை செயலகத்தில் 3 வாரங்களுக்குள் சமர்ப்பிக்கும்.

(iv) இந்த நடவடிக்கை, அந்நியச் செலாவணி வெளியேற்றத்தைக் குறைத்து, இந்திய ரூபாய் மதிப்பு குறைவதை தடுக்க உதவும் என்று தெரிவித்தனர்.

7. அடுத்த 6 மாதங்களில் மேலும் 3 நாடுகளுடன் இந்தியா தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொள்ளும்; 2027- ஆம் ஆண்டு இதேபோன்று மேலும் 3 ஒப்பந்தங்கள் கையொப்பமாக வாய்ப்புள்ளது என்று மத்திய வர்த்தகம், தொழில் துறை அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் தில்லியில் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

(i) கடந்த மூன்றரை ஆண்டுகளில் மோரீஷஸ், நியூஸிலாந்து, ஐக்கிய அரபு அமீரகம், ஓமன், பிரிட்டன், ஆஸ்திரேலியா, ஐரோப்பிய தடையற்ற வர்த்தகக் கூட்டமைப்பு, ஐரோப்பிய யூனியன், அமெரிக்கா என ஒன்பது நாடுகள் மற்றும் நாடுகளின் கூட்டமைப்புடன் இந்தியா தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்துள்ளது.

(ii) இதில் மோரீஷஸ், ஐக்கிய அரபு அமீரகம், ஆஸ்திரேலியா, ஓமன், ஐரோப்பிய தடையற்ற வர்த்தகக் கூட்டமைப்பு ஆகியவற்றுடன் ஒப்பந்தம் அமலுக்கு வந்துவிட்டது. பிரிட்டன், நியூஸிலாந்துடன் தனிப்பட்ட ஒப்பந்தங்கள் கையொப்பமாகியுள்ளன. அடுத்த 6 மாதங்களில் மேலும் 3 நாடுகளுடன் இந்தியா தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொள்ளும்; 2027-ஆம் ஆண்டு இதேபோன்று மேலும் 3 ஒப்பந்தங்கள் கையொப்பமாக வாய்ப்புள்ளது. எனவே, இந்தியாவில் தொழில் நடத்தும் நிறுவனங்களுக்கு 'நீண்ட காலத்தில் சிறப்பான வாய்ப்புகள் கிடைக்கும்.

8. நாட்டில் ஜனநாயக முறைப்படி தேர்வு செய்யப்பட்டு, தொடர்ந்து நீண்ட காலம் பதவி வகித்த பிரதமர் என்ற பெருமை பிரதமர் நரேந்திர மோடிக்கு அடுத்த சில தினங்களில் கிடைக்கவுள்ளது. இதன் மூலம் நாட்டின் முதல் பிரதமர் ஜவாஹர்லால் நேருவின் சாதனையை அவர் விஞ்சவுள்ளார்.

(i) சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமரான ஜவாஹர்லால் நேரு, கடந்த 1947, ஆகஸ்ட் 15 முதல் 1964, மே 27-இல் காலமாகும் வரை அந்தப் பதவியில் தொடர்ந்தார்.

(ii) கிட்டத்தட்ட 17 ஆண்டுகள் தொடர்ந்து பிரதமராக இருந்த அவர், நாட்டின் நீண்ட கால பிரதமர் என்ற பெருமைக்குரியவர்.

(iii) அதேநேரம், கடந்த 1952-இல் முதல் மக்களவைத் தேர்தலுக்குப் பிறகு நேரு தொடர்ந்து பிரதமராகப் பதவி வகித்த காலம் 4,398 நாள்களாகும்.

(iv) தற்போது நாட்டின் பிரதமராக தொடர்ந்து மூன்றாவது முறையாகப் பதவி வகித்துவரும் மோடி, தனது பதவிக் காலத்தில் 4,399 நாள்களை வரும் ஜூன் 10-ஆம் தேதியுடன் நிறைவு செய்யவுள்ளார். இதன் மூலம் ஜனநாயக முறைப்படி தேர்வு செய்யப்பட்டு, தொடர்ந்து நீண்ட காலம் பதவி வகித்த பிரதமர் என்ற சாதனையில் நேருவை மோடி விஞ்சவுள்ளார்.

9. உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு சுற்றுச்சூழல் பாதுகாப்பின் அவசியம்.

(i) உலக சுற்றுச்சூழல் தினத்தின் நோக்கம்

- பூமியைப் பாதுகாப்பதன் அவசியம் குறித்த உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்த, ஆண்டுதோறும் ஜூன் 5-ஆம் தேதி உலக சுற்றுச்சூழல் தினம் கடைபிடிக்கப்படுகிறது.
- மரங்களை நடுதல், பசுமை வளர்ச்சியை ஊக்குவித்தல் மற்றும் வருங்கால சந்ததியினருக்கு நிலையான மற்றும் பாதுகாப்பான பூமியை உறுதி செய்யும் பழக்கவழக்கங்களை வளர்த்தல் ஆகியவை இதன் முக்கிய

நோக்கங்களாகும்.

- 2026-ஆம் ஆண்டிற்கான கருப்பொருள் "இயற்கையை ஊக்குவித்தல், காலநிலையை மேம்படுத்துதல்" (Inspiring Nature, Improving Climate) என்பதாகும்; இது சுற்றுச்சூழல் அமைப்புகளை மீட்டெடுப்பதிலும், காலநிலை மாற்றத்தின் தாக்கங்களைக் குறைப்பதிலும் கவனம் செலுத்துகிறது.

(ii) உலகளாவிய சுற்றுச்சூழல் நெருக்கடி

- குறிப்பிடத்தக்க அறிவியல் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் இருந்தபோதிலும், பூமி கடுமையான சீரழிவை எதிர்கொள்கிறது: காடுகள் அழிக்கப்படுகின்றன, ஆறுகள் மாசுபடுகின்றன மற்றும் காற்று நச்சுத்தன்மை வாய்ந்ததாக மாறுகிறது.
- பல்வேறு உயிரினங்களின் தற்போதைய விரைவான அழிவை விஞ்ஞானிகள் "ஆறாவது பேரழிவு" (Sixth Extinction) என்று குறிப்பிடுகின்றனர்.
- பூமியின் வெப்பநிலை தொடர்ந்து உயர்வது திடீர் வெள்ளம், கடுமையான வறட்சி மற்றும் கடல் மட்ட உயர்வு போன்ற இயற்கை பேரிடர்கள் அடிக்கடி நிகழக் காரணமாகிறது.

(iii) சுகாதாரம் மற்றும் இயற்கையின் மீது மனித நடவடிக்கைகளின் தாக்கம்

- தொழிற்சாலைகள் மற்றும் வாகனங்களிலிருந்து வெளியேறும் புகையே காற்று மாசுபாட்டிற்கான முக்கிய காரணங்களாகும்; இது ஆஸ்துமா மற்றும் நுரையீரல் நோய்கள் போன்ற சுவாசப் பிரச்சனைகளின் அதிகரிப்புக்கு வழிவகுக்கிறது.
- மோசமான காற்றின் தரம் காரணமாக, டெல்லி மட்டுமல்லாமல் பல இந்திய நகரங்களும் இப்போது "வாயு அறைகள்" (gas chambers) என்று விமர்சிக்கப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.
- பிளாஸ்டிக் மாசுபாடு ஒரு கடுமையான அச்சுறுத்தலாகும்; ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டிக்குகள் மண் மற்றும் நீரை மாசுபடுத்தி, ஏராளமான உயிரினங்களின் இறப்புக்குக் காரணமாகின்றன.
- நகரமயமாக்கல் மற்றும் தொழில் விரிவாக்கம் ஆகியவை வனப்பகுதியை கணிசமாகக் குறைத்துள்ளன; இது மழைப்பொழிவு குறைவதற்கும் வெப்ப அலைகள் அதிகரிப்பதற்கும் வழிவகுத்துள்ளது.

(iv) உயிரினங்களுக்கிடையேயான பிணைப்பு

- ஒவ்வொரு உயிரினத்திற்கும் ஒரு குறிப்பிட்ட பங்கு உள்ளது: மகரந்தச் சேர்க்கைக்குத் தேனீக்கள் அவசியமானவை, மரங்கள் ஆக்சிஜனை வழங்குகின்றன, மற்றும் நுண்ணுயிரிகள் மண்ணின் வளத்தைப் பராமரிக்கின்றன.
- மனித நாகரிகம் முழுமையாக இந்த சுற்றுச்சூழல் சேவைகளைச் சார்ந்தே உள்ளது; அவை இல்லாவிட்டால் உயிர்வாழ்வது சாத்தியமற்றது.

(v) இந்தியாவின் சுற்றுச்சூழல் முன்னெடுப்புகள்

- மாசுபாடு மற்றும் கழிவுகளைக் கட்டுப்படுத்த இந்தியா பல திட்டங்களைத் தொடங்கியுள்ளது; இதில் "தூய்மை இந்தியா" (Swachh Bharat) இயக்கம், பிளாஸ்டிக் பயன்பாட்டுத் தடை மற்றும் ஆறுகளைச் சுத்தப்படுத்தும் திட்டங்கள் ஆகியவை அடங்கும்.
- கார்பன் வெளியேற்றத்தைக் குறைக்க, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்கள், குறிப்பாக சூரிய சக்தி மற்றும் காற்றாலை மின்சாரம் ஆகியவற்றின் மீது தேசிய அளவில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.
- பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் சிறப்பு மாணவர் மன்றங்கள் மூலம் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு தீவிரமாக ஊக்குவிக்கப்படுகிறது.

(vi) எதிர்காலத்திற்கான கூட்டுப் பொறுப்பு

- பூமி என்பது நமக்குச் சொந்தமான ஒரு சொத்து அல்ல; மாறாக, முந்தைய தலைமுறையினரிடமிருந்து நாம் பெற்று, அடுத்த தலைமுறையினரிடம் பாதுகாப்பாக ஒப்படைக்க வேண்டிய ஒரு 'செல்வம்' ஆகும்.
- சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதை அரசின் முயற்சிகளால் மட்டுமே சாதித்துவிட முடியாது; இதற்கு ஒவ்வொரு தனிமனிதரும் தங்கள் வாழ்க்கை முறையில் நிலையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டியது அவசியம்.
- பாதுகாப்பான எதிர்காலத்தை அமைப்பதற்கான மிக முக்கிய இலக்குகள்: அதிக மரங்களை நடுதல், மாசுபாட்டைக் குறைத்தல் மற்றும் இயற்கையோடு இயைந்து வாழ்தல் ஆகியவை ஆகும்.

10. இந்தியாவின் எரிசக்தித் தேவைகளைப் பூர்த்தி செய்வதையும், இருதரப்பு உறவுகளை விரிவுபடுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட உயர்மட்ட தூதரக பேச்சுவார்த்தை

(i) உயர்மட்ட தூதரகச் சந்திப்பு

- பிரதமர் Narendra Modi மற்றும் வெனிசுலாவின் செயல் அதிபர் Delcy Rodríguez ஆகியோர் புதுதில்லியில் சந்தித்து, நீண்டகால எரிசக்தி ஒத்துழைப்புக்கான கட்டமைப்பை உருவாக்குவது குறித்து ஆலோசனை நடத்தினர்.
- இரு நாடுகளுக்கிடையேயான உறவுகளை பல்வேறு துறைகளில் வலுப்படுத்துவது தொடர்பாக விரிவான பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

(ii) எரிசக்தி உறவுகளைப் புதுப்பித்தல்

- இந்தியாவின் வேகமான பொருளாதார வளர்ச்சி மற்றும் நீடித்த எரிசக்தித் தேவையைக் கருத்தில் கொண்டு, வெனிசுலா இந்தியாவை “விருப்பத்திற்குரிய எரிசக்தி கூட்டாளி” எனக் கருதுகிறது.
- எரிசக்தி உற்பத்தி மற்றும் விநியோகத் துறைகளில் இந்தக் கூட்டுறவை மேலும் வலுப்படுத்த இந்தியா உறுதிபூண்டுள்ளதாக பிரதமர் மோடி

தெரிவித்தார்.

- சில சர்வதேசத் தடைகள் தளர்த்தப்பட்டதைத் தொடர்ந்து, வெனிசுலாவிலிருந்து கச்சா எண்ணெய் இறக்குமதியை இந்தியா மீண்டும் தொடங்கி, தற்போது அதிகரித்து வருகிறது.
- 2020-ஆம் ஆண்டுக்கு முன்பு, வெனிசுலா இந்தியாவுக்கு தினசரி 4 லட்சத்திற்கும் அதிகமான பேரல் கச்சா எண்ணெயை வழங்கிய முக்கிய சப்ளையராக இருந்தது.

(iii) வியூக முக்கியத்துவம் மற்றும் பல்வகைப்படுத்தல்

- உலகளாவிய விநியோகச் சங்கிலி பாதிப்புகள் மற்றும் மேற்கு ஆசியாவில் நிலவும் புவிசார் அரசியல் பதற்றங்களின் மத்தியில், இந்தியா தனது எரிசக்தி ஆதாரங்களைப் பல்வகைப்படுத்த முயற்சித்து வருகிறது. இந்த நிலையில் இந்தியா–வெனிசுலா ஒத்துழைப்பு வியூக ரீதியாக முக்கியத்துவம் பெறுகிறது.
- சர்வதேச எண்ணெய் சந்தைகளின் விலை ஏற்றத் தாழ்வுகளிலிருந்து இந்தியப் பொருளாதாரத்தைப் பாதுகாக்க எண்ணெய் இறக்குமதி ஆதாரங்களைப் பல்வகைப்படுத்துவது அவசியமான நடவடிக்கையாகக் கருதப்படுகிறது.

(iv) நிதி மற்றும் சுரங்கத் துறை விவகாரங்கள்

- வெனிசுலா இந்திய நிறுவனமான ONGC Videsh-க்கு வழங்க வேண்டிய சுமார் 500 மில்லியன் அமெரிக்க டாலர் நிலுவை ஈவுத்தொகை (dividend) தொடர்பான விவகாரத்தை இந்தியா எழுப்பியது.
- மேலும், தங்கம், வைரம் மற்றும் பிற முக்கிய கனிம வளங்கள் தொடர்பாக சுரங்கத் துறையில் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகளையும் இரு நாடுகளும் ஆராய்ந்தன.

(v) பொருளாதார மற்றும் தொழில்துறை ஒத்துழைப்பு

- எரிசக்தியைத் தாண்டி, மருந்துத் தயாரிப்பு, வேளாண்மை, வாகன உற்பத்தி, சுகாதாரம், தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) உள்ளிட்ட துறைகளிலும் ஒத்துழைப்பை விரிவுபடுத்துவது குறித்து இருதரப்பும் விவாதித்தன.
- இந்தப் பயணத்தில் வெளியுறவு, பொருளாதாரம், நிதி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளைச் சேர்ந்த வெனிசுலா அமைச்சர்கள் அடங்கிய உயர்மட்டக் குழுவும் பங்கேற்றது.